<u>விரைவு நீதிமன்றம், காரைக்குடி</u>

**முன்னிலை : செல்வி. செ. ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)**

**நீதித்துறை குற்றவியல் நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், காரைக்குடி.**

**2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09 ம் நாள் திங்கள்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண்.2875/2024**
**இன்**
**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் :28/2024</u>**

முத்துமயில் ......மனுதாரர்/எதிரி

/எதிர்/

ராமலிங்கம் .......எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது, கடந்த 22.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இன்று 09.12.2024-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.ராமசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஜே.கே.சண்முகசேகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, மனுதாரர்/எதிரி தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிட அனுமதிகோரி BNSS 348-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**<u>1. மனுச்சுருக்கம்</u>**

மேற்படி வழக்கு கடந்த 09.10.2024 ம் தேதியன்று ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்தா கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் மனுதாரர்/எதிரிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் குறுக்கு விசாரணை செய்யவில்லை. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்படி வழக்கை நிரூபிப்பதற்கு ம.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்யாமல் போனால் எதிரிக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். மேற்படி மனுதாரர்/எதிரிக்கு ஒருவாய்ப்பு அளிக்கும்பொருட்டு ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிட அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.எதிருரை**

மனுதாரர்/எதிரி தரப்பில் எதிர்மனுதாரர்/புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த ரீ-கால் மனுவும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மாண்பமை நீதிமன்றம் எதிரி தரப்பிற்கு புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு பலமுறை வாய்ப்பளித்தும் எதிரி புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் குறுக்கு விசாரணை செய்யாமலும் எந்த ஒரு நியாயமான காரணம் கண்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரீ-கால் மனுவினை என்ன காரணத்திற்காக எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லையென்ற சரியான காரணம் சொல்லாததை கண்டு மேற்படி மனுவினை தள்ளுபடி செய்யவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா அல்லது இல்லையா?

**4. பிரச்சனைக்குரிய தீர்வு**

1)இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா என்பது குறித்து பார்க்கும்போது மூலவழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் ம.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று அறியமுடிகிறது. ஆகவே தரப்பினருக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்று இயற்கை நியதியின் அடிப்படையில் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேற்படி மனுவும் அனுமதிப்பது அவசியமானதென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, மனுதாரர்/எதிரி தாக்கல் செய்திருக்கும் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது, என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் 09-ம் நாள் திங்கள்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.